TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093865

1. District மாவட்டம் : DVAC    PS: காவல்நிலையம் VLAC HQRS.    Year: ஆண்டு 2019    FIR No.: மு.த.அ. எண் 07    Date: நாள் 01.03.201

2. (i) Act சட்டம்: Cr.P.C.    Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: Prevention of corruption    Sections பிரிவுகள்: 7
   (iii) Act சட்டம்: (Amendment) Act 2018    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 02.01.2019    Date to : நாள் வரை 03.01.2019
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் 18.30 hrs.    Time to : நேரம் வரை 01.30 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.01.2019    Time : நேரம் 11.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 01.03.2019    Time : நேரம் 1700 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்    East 8 Kms.
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி Office of the Chief Engineer, (Distribution) Chennai South Region, No.144, Block-V TANGEDCO, Anna Salai, Chennai-2.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt. P. Sumathi    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு    (d) Nationality : நாட்டினம்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் District Inspection Cell officer    (g) Address : முகவரி Chennai Collectorate, Chennai-1.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr.K.MUTHU, Chief Engineer (Distribution) Chennai South Rg TANGEDCO, Anna Salai Chennai-2.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   To get concurrence from the Directorate of Vigilance Anti-corruption Chennai.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : (i) Rs.1,15,000/=
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு (ii) 3 gold coins totally weighing 18 grams
(iii) New branded dress Materials] - 16 Nos.

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR contents is enclosed in a separate sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / ~~directed~~ S. VALLINAYAGAM Rank Inspector of Police to take up the investigation / Refused investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Informed to the Complainant.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. Vallinayagam 01.03.2019
Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Despatched on 01.03.2019 at 16.30 hrs.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

(S. VALLI NAYAGAM)

Name: பெயர் Inspector of Police
Rank: நிலை Special Investigation Cell ~~No.~~ எண்
Vigilance & Anti-corruption
Chennai - 600016.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.7/2019 சட்டப்பிரிவு 102 கு.வி.மு.ச. மற்றும் சட்டப்பிரிவு 7. ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு

திருமதி.பி.சுமதி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை என்பவர் சென்னை அண்ணா சாலை நம்பர்.144, பிளாக் 5-ஏ யில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம் அலுவலகம், சென்னை தெற்கு மண்டலம் தலைமை பொறியாளர் (விநியோகம்) அவர்கள் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை தொடர்பாக அளித்த புகார் மனு 03.01.2019ந் தேதி காலை 11 மணியளவில் பெறப்பட்டது. மேற்படி புகார் மனு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்தறை இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்டது. பின்னர் இயக்குநரக உத்தரவின்படி இன்று 01.03.2019ந் தேதி மாலை 16.00 மணிக்கு இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. திருமதி.வே.சுமதி அவர்கள் அளித்த புகாரின் விவரம் பின்வருமாறு

"

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி.வே.சுமதி,<br>துணை ஆட்சியர் / மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர், சென்னை மாவட்டம்,<br>சென்னை-1 | காவல் துணை கண்காணிப்பாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர், சென்னை-16. |

ந.க.எண்.அ/3/2019 நாள் - 03.01.2019

அய்யா,

பொருள் - இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-2, அண்ணா சாலை, நெ.144, பிளாக் 5-A யில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம் அலுவலகம், சென்னை தெற்கு மண்டலம் தலைமை பொறியாளர் (விநியோகம்) அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை நாள் 02.01.2019 மற்றும் 03.01.2019 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக.

===

சென்னை மாவட்ட ஆய்வுக்குழுமம் மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு பிரிவு-2, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை 02.01.2019 மற்றும் 03.01.2019-ம் தேதி சென்னை-2, அண்ணா சாலை, நெ.144, பிளாக் 5-A யில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம் அலுவலகம், சென்னை தெற்கு மண்டலம் தலைமை பொறியாளர் (விநியோகம்) அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கையின் போது மேற்படி அலுவலகத்தில் தணிக்கை நடவடிக்கையின் கீழ் கைப்பற்றப்பட்ட ரொக்கம் தொகை ரூ.1,15,000/-, சட்டை துணிகள்-12, பேண்ட் துணிகள்-7, மூன்று தங்க நாணயங்கள் மொத்தம் எடை 18 கிராம், ரெக்சின் பை மற்றும் கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் ஆகியவைகள் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது.

மேற்படி கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்

தங்கள் நம்பிக்கைக்குரிய,

இணைப்பு- மேற்கண்டவாறு

மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,
சென்னை-1. "

Madam, Received this petition on 03.01.2019 at 11.00 hrs. This information was communicated to the Directorate of Vigilance and Anti-Corruption. After getting concurrence from the Directorate, I register a case in V&AC Hqrs.Cr.No.7/2019 u/s 102 Cr.P.C. and Section 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 this day (01.03.2019)e complaint and as per the orders of Directorate of Vigilance and Anti-Corruption, Chennai, this day (01.03.2019) at 16.00 hrs and taken up for investigation Sd/-S.VALLINAYAGAM, Inspector of Police, V&AC, SIC 01.03.2019.

<u>இருதுறை கூட்டுத்தணிக்கை நடவடிக்கை குறிப்பு பின்வருமாறு :</u>

சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்புப் புலனாய்வுக்குழு காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து இன்று (02.01.2019) சென்னை-2, அண்ணா சாலை, நெ.144, பிளாக் 5-A யில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம் அலுவலகம், சென்னை தெற்கு மண்டலம் தலைமை பொறியாளர் (விநியோகம்) அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை.

.......................................................................................................................................

| | |
|---|---|
| இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்: | 1. திருமதி.வே.சுமதி,<br>மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,<br>சென்னை மாவட்டம்,<br>சென்னை-1.<br><br>2. திரு.M.குமரகுருபரன்,<br>காவல் துணைக் கண்காணிப்பாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16.<br><br>3. திரு.தி.கந்தசாமி,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16.<br><br>4. திரு.S.வள்ளிநாயகம்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16.<br><br>5. திருமதி.சோ.மலர்கொடி,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |

சென்னை-2, அண்ணா சாலை, நெ.144, பிளாக் 5-A என்ற முகவரியிலுள்ள தமிழ்நாடு உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம், சென்னை தெற்கு மண்டல தலைமை பொறியாளர் (விநியோகம்) திரு.K.முத்து அவர்களிடம் அவருக்கு கீழ் பணியாற்றும் மின்வாரிய அதிகாரிகள் 2019 புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கையூட்டாக பணமும், தங்க நாணயங்களும் அவரிடம் இன்று மாலையில் அளிக்க இருப்பதாக நம்பகமான ரகசிய தகவல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சிறப்பு புலனாய்வு பிரிவிற்கு கிடைத்தது. மேற்படி தகவலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை உயர் அதிகாரிகளிடம் தெரிவித்து திடீர் சோதனை நடத்த அனுமதி பெறப்பட்டது. பின் சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து அவர்களையும் சோதனைக்கு அழைக்கப்பட்டு இரு துறையும் இணைந்து இன்று (02.01.2019) மாலை சுமார் 6.30 மணியளவில் இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது.

2) சென்னை-2, அண்ணா சாலை, நெ.144 என்ற முகவரியிலுள்ள தமிழ்நாடு உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம், சென்னை தெற்கு மண்டல தலைமை பொறியாளர் (விநியோகம்) அலுவலகம் பிளாக் 5-A கட்டிடத்தில் முதல் தளத்தில் இயங்கி வருகிறது. இரு துறை கூட்டு தணிக்கை இன்று மாலை 6.30 மணியளவில் துவங்கப்பட்டது. மேற்படி தலைமை பொறியாளர் அவரது அறையில் வடக்கு நோக்கி அவரது இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி மின்வாரிய அதிகாரிகள் வராண்டாவிலும், உட்பகுதியிலும் நின்றிருந்தனர்.

3) தலைமை பொறியாளர் திரு.K.முத்து என்பவரிடம் தணிக்கை குழுவினர் விவரத்தை தெரிவித்து அவரிடம் உள்ள பணம் மற்றும் பொருட்களை ஆஜர் செய்யும்படி கேட்க அவர் தனது சட்டையின் மேல் பாக்கெட்டிலிருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி ரூபாய் நோட்டுக்களை எண்ணிப் பார்த்தபோது ரூ.4,900/- இருந்தது. இந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்தப் பணம் என்றும், தான் செங்கல்பட்டிலிருந்து அலுவலகத்திற்கு வருவதால் அவசர தேவைக்கு வைத்திருப்பதாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்புடையதாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.4,900/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

4) பின்னர் தலைமை பொறியாளர் திரு.K.முத்து அவர்களிடம் இந்த பணத்தை தவிர வேறு ஏதாவது பணம் மற்றும் பொருள்கள் வைத்துள்ளீர்களா என்று கேட்டதற்கு முதலில் இல்லை என்று மறுத்தார். பின்னர் அவரிடம் அவரது உடைமைகள் குறித்து கேட்டதற்கு தனது கைப்பையில் உள்ளது என்றும் அந்த கைப்பை தனது டிரைவர் திரு.அருணகிரியிடம் தற்போது தான் கொடுத்து தனது அலுவலக உபயோகத்திற்காக உள்ள காரில் (Maruti Swift Dzire பதிவு எண். TN-01-BE-4236) வைத்துள்ளதாக தெரிவித்தார். அதனை தொடர்ந்து தலைமை பொறியாளரிடம் அந்த பையை எடுத்து வர சொல்லுங்கள் என்று கேட்டதின் பேரில் அவர் டிரைவர் திரு.அருணகிரியை அழைத்து தனது கைப்பையை எடுத்து வரச்சொன்னார். அப்போது மேற்படி திரு.அருணகிரி TREC 2016 என்ற எழுத்துக்களுடன் கூடிய பிரௌன் கலர் பார்டர் கொண்ட கருப்பு நிற ரெக்சின் பேக்கை கொண்டு வந்து தலைமை பொறியாளரிடம் கொடுத்தார். தலைமை பொறியாளர் அந்த பேக்கை திறந்து காண்பித்தார். அந்த கருப்பு நிற பேக் ஐந்து அறைகளாக இருந்தது. அந்த கருப்பு நிற பேக்கின் முதல் அறையில் இருந்து மேற்படி தலைமை பொறியாளர் ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஐநூறு ரூபாய் நோட்டு கட்டுகள் இரண்டு இருந்தது. ஒரு கட்டில் TMB (Tamilnad Mercantile Bank Ltd) Form No.127, CHENNAI-21 BRANCH என்று வெள்ளை நிற சிலிப்பில் அச்சிடப்பட்டும், Oil Mills Chennai 600 019 என்று முத்திரையிடப்பட்ட வெள்ளை நிற நூலில் கட்டப்பட்ட நிலையில் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணிப்பார்த்தபோது ரூ.50,000/- இருந்தது. மற்றொரு கட்டில் இரப்பர் பேண்டால் சுற்றப்பட்ட நிலையில் மடித்த நிலையில் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணிப்பார்த்தபோது ரூ.30,000/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | ரூபாய் நோட்டுக்களின் மதிப்பும் மற்றும் எண்ணிக்கை விவரம். | மொத்தம் ரூபாய் |
|---|---|---|
| 1 | Rs.500 x 100 | Rs.50,000.00 |
| 2 | Rs.500 x 60 | Rs.30,000.00 |
| | Total | Rs.80,000.00 |

5) மேற்படி பணம் ரூ.80,000/- குறித்து தலைமை பொறியாளர் திரு.K.முத்து அவர்களிடம் கேட்டபோது தனது மகன் திரு.அஜெய் என்பவர் மதுராந்தகத்தில் உள்ள கற்பக விநாயக இன்ஸ்ட்டியூட் ஆப் மெடிக்கல் சயின்ஸ் கல்லூரியில் டாக்டராக பணிபுரிவதாகவும், அவர் சர்ஜிக்கல்ஸ் தொடர்பான RF Generator வாங்க இன்று 02.01.2019-ம் தேதி காலை சுமார் 8.30 மணியளவில் செங்கல்பட்டில் உள்ள தனது வீட்டில் வைத்து கொடுத்ததாக தெரிவித்தார். RF Generator surgery Instrument- ன் வாங்குவதற்கான Specification குறித்து கேட்டதற்கு அது குறித்து தனக்கு தெரியாது என்று தெரிவித்தார். மேற்படி தொகை ரூ.80,000/-க்கான அவரது விளக்கம் முன்னுக்கு பின் முரணாக உள்ளதால் லஞ்சப் பணம் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

6) அந்த கருப்பு நிற பேக்கின் இரண்டாவது அறையில் இருந்து மூன்று சிறிய நகை டப்பாக்களை எடுத்து தலைமை பொறியாளர் ஆஜர் செய்தார். அவைகளை ஆய்வு செய்ததில் GRT JEWELLERS என்ற பழுப்பு நிற சிறிய வட்ட வடிவத்தில் மூன்று டப்பாக்கள் காணப்பட்டது. அந்த மூன்று டப்பாக்களை சோதனை செய்த போது ஒவ்வொரு டப்பாவிலும் தனித் தனியே தலா ஒரு தங்க நாணயம் காணப்பட்டது. அந்த தங்க நாணயங்களின் ஒரு பக்கத்தில் எடை பற்றிய விவரம் பொறிக்கப்பட்டும், மற்றொரு பக்கத்தில் மகாலஉஷ்மி உருவம் பொறித்தும் காணப்பட்டது. தங்க நாணயங்களின் எடை விவரம் பின்வருமாறு.

| வ.எண். | தங்க நாணயங்களின் எண்ணிக்கை | தங்க நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள எடை விவரம் |
|---|---|---|
| 1 | ஒன்று | 4 கிராம் |
| 2 | ஒன்று | 6 கிராம் |
| 3 | ஒன்று | 8 கிராம் |
| மொத்தம் | மூன்று | 18 கிராம் |

7) மேற்படி தங்க நாணயங்கள் குறித்து தலைமை பொறியாளர் திரு.K.முத்து அவர்களிடம் கேட்டபோது தனது சம்பந்தி திரு.சுந்தரராஜன் அவர்கள் நேற்று செங்கல்பட்டில் உள்ள தனது வீட்டிற்கு வந்ததாகவும், அப்போது அவர் மேற்படி 3 தங்க நாணயங்களை மறந்து தனது வீட்டில் வைத்து விட்டு சென்றதாகவும், அந்த 3 தங்க நாணயங்களை திருப்பி கொடுப்பதற்காக தனது பேக்கில் வைத்து எடுத்து வந்ததாக தெரிவித்தார். தனது சம்பந்தியின் தொலைபேசி எண் தன்னிடம் இல்லை என்றும் தனது சம்பந்தியின் முகவரி தெரியாது என்றும் ஆனால் இடம் தெரியும் என்றும் கூறினார். இந்த விளக்கமும் முன்னுக்கு பின் முரணாக இருப்பதால் லஞ்சமாக வாங்கப்பட்ட நகைகளாக இருக்கலாம் என்ற ஐயத்தின் பேரில் மேற்படி மூன்று தங்க நாணயங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

8) தலைமை பொறியாளர் திரு.K.முத்து அவர்களின் அலுவலகத்தின் போர்டிகோவில் நிறுத்தியிருந்த காரின் டிக்கியை (Maruti Swift Dzire பதிவு எண். TN-01-BE-4236) அவரது டிரைவர் திரு.அருணகிரி முன்னிலையில் சோதனை செய்தபோது புதிய தைக்கப்படாத விலை மதிப்புள்ள பிராண்டட் வகை சட்டை மற்றும் பேண்ட் துணிகள் இருந்தது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | டிரஸ் மெட்டிரிபல்ஸ் விவரம் | டிரஸ் மெட்டிரியல்ஸ் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Premium Linen என்று அச்சிடப்பட்ட light blue நிறம் கொண்ட சட்டை துணி | 1 |
| 2 | Alaya என்ற ஸ்டிக்கருடன் கூடிய பழுப்புநிறம் கொண்டதும் MRP Rs.385/- உடன் உள்ள சட்டை துணி | 1 |
| 3 | வெளிர் பச்சை நிறம் கொண்ட சட்டை துணி | 1 |
| 4 | RAMRAJ WHITE 100% COTTON என்ற பெயரிடப்பட்ட சட்டை துணி | 1 |
| 5 | வெள்ளை நிற கோடுகொண்ட வெளிர் நீல நிறம் கொண்ட சட்டை துணி. | 1 |
| 6 | வெள்ளை நிறம் கொண்ட சட்டை துணி | 1 |
| 7 | S&Y Asheville Super 110 Terrywool என்று எழுதப்பட்ட காப்பி நிற பேண்ட் துணி ஒன்று | 1 |
| 8 | Etara By Raymond என்று எழுதப்பட்ட நீல நிற பேண்ட் துணி ஒன்று | 1 |

இவ்வளவு துணிகள் தான் தங்களிடம் உள்ளதா என தலைமை பொறியாளரிடம் கேட்டதற்கு இது தவிர மேலும் சில துணிகளை செங்கல்பட்டு, மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் திரு.சுரேஉஷ்குமார் என்பவரிடம் சொல்லிவிட்டு அவரது டிரைவர் திரு.R.ரமேஉஷ் என்பவரிடம் கொடுத்து மேற்படி மேற்பார்வை பொறியாளருக்கு சொந்தமான TN-19-AC-8718 என்ற Swift Dzire காரில் வைத்து செங்கல்பட்டு எடுத்து சென்று தனது வீட்டில் கொடுக்க சொல்வதாற்காக கொடுத்து அனுப்பியதாக தெரிவித்தார். மேற்படி தலைமை பொறியாளர் அலுவலகத்தின் கீழே அலுவலகத்தை ஒட்டி தெற்கு பகுதியில் வாகனம் நிறுத்தும் இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த மேற்படி காரில் அதன் ஓட்டுநர் திரு. R.ரமேஉஷ் உதவியிடன் காரின் டிக்கியை திறந்து பார்த்தபோது கீழ்கண்ட

| | | |
|---|---|---|
| 1 | Raymond 100% premium cotton என்ற எழுத்துக்களுடன் கூடிய சிறிய கட்டம் போட்ட வெளிர் சாம்பல் நிறம் கொண்ட சட்டை துணி | 1 |
| 2 | Raymond Elation Fine shirting Fabric என்ற எழுத்துக்களுடன் கூடிய வெளிர் சாம்பல் மற்றும் வெளிர் நீல நிற கோடுகள் கொண்ட சட்டை. | 1 |
| 3 | Royal Shelton என்ற பெயரிடப்பட்டுள்ள அட்டை பெட்டியில் வெள்ளை நிற சட்டை துணி ஒன்று, சாம்பல் நிற பேண்ட் துணி ஒன்று | சட்டை ஒன்று, பேண்ட் ஒன்று |
| 4 | Park Avenue என்ற பெயரிடப்பட்டுள்ள அட்டை பெட்டியில் சாக்லெட் நிறத்தில் காணப்பட்ட Safari டிரஸ்க்கான துணி மெட்டிரியல்ஸ், அதில் விலை ரூ.3,199/- என அச்சிடப்பட்டுள்ளது. | 1 |
| 5 | Raymond FINEST SHIRTING & TROUSER FABRIC என்று அச்சிடப்பட்டுள்ள அந்த அட்டை பெட்டியில் சிறிய கட்டம் போட்ட ரோஸ் நிற சட்டை துணி ஒன்று, மற்றும் அடர் சாம்பல் நிற பேண்ட் துணி ஒன்று, அந்த அட்டை பெட்டியில் விலை ரூ.1,349/- | சட்டை துணி 1 பேண்ட் துணி 1 |
| 6 | காக்கி நிற காகித CE/AEE என்று எழுதப்பட்ட கவரில் வெளிர் சாம்பல் நிற பேன்டும், வெள்ளையில் நீலம் மற்றும் காப்பி நிற கட்டம் போட்ட சட்டை துணி ஒன்று | சட்டை துணி 1 பேண்ட் துணி 1 |
| 7 | Lilly Fashion என்று எழுதப்பட்ட கருநீல பேண்ட் துணி ஒன்று | 1 |
| 8 | SGS International Zoyce Edition என்று எழுதப்பட்ட கரும்பச்சை பேண்ட் துணி ஒன்று | 1 |

9) மேற்படி டிரஸ் மெட்டிரியல்ஸ்களை மேற்படி தலைமை பொறியாளர் திரு.K.முத்து அவர்களின் அறைக்கு கொண்டு வந்து அவரிடம் காண்பித்து கேட்ட போது தான் கொடுத்தனுப்பியதுதான் என்று சொன்னார். அப்போது அங்கு நின்றிருந்த செங்கல்பட்டு மேற்பார்வை பொறியாளர் திரு.சுரேஉஷ்குமார் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது தலைமை பொறியாளர் கூறியதால் நான் செங்கல்பட்டு செல்ல வேண்டி இருப்பதால் அதை அவரது டிரைவர் வாங்கி தனது காரில் வைத்ததாக கூறினார். அதற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்றார். மேற்படி துணிகள் குறித்து தலைமை பொறியாளரிடம் கேட்ட போது இன்று தன்னை மரியாதை நிமிர்த்தமாக சந்திக்க வந்தவர்கள் பொன்னாடை போன்று மேற்படி துணிகளை அணிவித்ததாக தெரிவித்தார். எனவே மேற்கண்ட 12 சட்டை துணிகள், 7 பேண்ட் துணிகள் ஆகியவைகள் லஞ்சமாக பெற்றிருக்கலாம் என்ற ஐயத்தின் பேரில் விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது.

10) சோதனையின் போது மேற்படி தலைமை பொறியாளர் அலுவலக அறையில் நின்றிருந்தவர்களில் ஒருவரை கேட்டபோது தனது பெயர் எம்.தேவக்குமார் என்றும் தான் செயற் பொறியாளராக (MRT) செங்கல்பட்டில் பணிபுரிவதாகவும், மேற்படி தலைமை பொறியாளரை மரியாதை நிமிர்த்தமாக சந்திக்க வந்ததாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டதற்கு அவர் தனது பேண்ட்ன் இடது புற பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப் பார்த்தபோது அதில் ரூ.10,000/- (5 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்கள்) இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே மடித்த நிலையில் மடக்கி வைக்கப்பட்டிருந்தது. இதைத் தவிர மேலும் பணம் உள்ளதா என கேட்க தனது மேல் சட்டையின் இடது புற பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப் பார்த்ததில் ரூ.5,200/- இருந்தது. இந்த பணம் ரூ.5,200/- (Rs.500x9, Rs.100x5, Rs.50x1, Rs.20x3, Rs.10x9) குறித்து கேட்க தான் செலவிற்காக எடுத்து வந்த சொந்த பணம் என்று தெரிவித்ததால் மேற்படி பணம் அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. மீதி பணம் ரூ.10,000/- தலைமை பொறியாளருக்கு லஞ்சமாக கொடுப்பதற்கு எடுத்து வந்த பணம் என்ற ஐயத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது.

11) இரண்டாவதாக நின்றிருந்த நபரை கேட்க அவர் தனது பெயர் எம்.செந்தில்குமார் என்றும், மாமல்லபுரத்தில் மின்வாரிய உதவி செயற் பொறியாளராக (இயக்குதல் மற்றும் பராமரிப்பு) பணியாற்றி வருவதாகவும், மரியாதை நிமித்தமாக தலைமை பொறியாளரை சந்திக்க வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டதற்கு தனது பேண்ட்-ன் பின் பக்க பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்த்த போது ரூ.5000/- இருந்தது (Rs.500x10). மேற்படி ரூபாய் நோட்டுக்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே மடித்து வைக்கப்பட்டிருந்தது. இதைத் தவிர மேலும் பணம் உள்ளதா என கேட்க தனது மேல் சட்டையின் இடது புற பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப் பார்த்ததில் ரூ.2,270/- இருந்தது. இந்த பணம் ரூ.2,270/- (Rs.500x2, Rs.100x11, Rs.20x4, Rs.10x9) குறித்து கேட்க தான் செலவிற்காக எடுத்து வந்த சொந்த பணம் என்று தெரிவித்தார். சொந்த செலவிற்காக எடுத்து வந்த பணம் ரூ.2,270/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. மீதி பணம் ரூ.5,000/- தலைமை பொறியாளருக்கு லஞ்சமாக கொடுப்பதற்கு எடுத்து வந்த பணம் என்ற ஐயத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது.

12) மூன்றாவதாக நின்றிருந்த நபர் குறித்து கேட்ட போது அவர் தனது பெயர் சுகுமார் சுப்பிரமணி என்றும், தான் மேல்மருவத்தூர் மின்வாரிய உதவி செயற் பொறியாளராக பணியாற்றி வருவதாக தெரிவித்தார். மரியாதை நிமித்தமாக இன்று மேற்படி தலைமை பொறியாளரை சந்திக்க வந்ததாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டதற்கு தனது இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்த்த போது ரூ.30,000/- இருந்தது (Rs.2000x9, Rs.500x22, Rs.200x5). இதைத் தவிர மேலும் பணம் உள்ளதா என கேட்க தனது மேல் சட்டையின் இடது புற பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப் பார்த்ததில் ரூ.410/- இருந்தது. (Rs.200x1, Rs.100x1, Rs.50x1, Rs.20x1, Rs.10x4). இந்தப் பணம் மொத்தம் ரூ.30,410/- குறித்து கேட்க தான் செலவிற்காக ரூ.410/- வீட்டில் இருந்து எடுத்து வந்ததாகவும், மீதி பணம் ரூ.30,000/- கஜா புயலுக்கு செலவு செய்த தொகைக்காக அச்சிறுப்பாக்கம் துணை மின் நிலைய உதவி பொறியாளர் திரு.யுவாகர் இன்று காலை 10.30 மணியளவில் அச்சிறுப்பாக்கம், செயற் பொறியாளர் அலுவலகத்தில் (இயக்கமும் பராமரித்தலும்) வைத்து அரசு கணக்கில் செலுத்துவதற்காக தன்னிடம்

கொடுத்ததாக கூறினார். இதனை உறுதிப்படுத்த மேற்படி அச்சிறுப்பாக்கம் உதவி பொறியாளர் திரு.யுவாகர் அவர்களிடம் அவரது செல்போன் 94458 50029 எண்ணிற்கு மேற்படி திரு.சுகுமார் சுப்பிரமணியம் தனது மொபைல் எண். 94458 50037 என்ற எண்ணில் இருந்து இன்று இரவு 9.08 மணிக்கு தொடர்பு கொண்டு ஸ்பீக்கரை ஆன் செய்து அவரிடம் கேட்ட போது அவர் ரூ.10,000/- மட்டுமே கொடுத்ததாக தெரிவித்தார். எனவே ரூ.10,000/- மேற்படி உதவி செயற் பொறியாளர் திரு.சுகுமார் சுப்பிரமணியம் திருப்பி அளித்து அரசு கணக்கில் செலுத்த அறிவுறுத்தப்பட்டது. மீதி பணம் ரூ.20,000/- (Rs.2000x4, Rs.500x22, Rs.200x5) தலைமை பொறியாளருக்கு லஞ்சமாக கொடுப்பதற்கு கொண்டு வந்த பணம் என்ற ஐயத்தின் பேரில் கைப்பற்றப்பட்டது.

13) நான்காவதாக நின்றிருந்த நபரை கேட்க அவர் தனது பெயர் எஸ்.முரளி என்றும், தான் மண்ணூர் பிரிவில் உதவி பொறியாளராக பணியாற்றி வருவதாகவும், மரியாதை நிமித்தமாக மேற்படி தலைமை பொறியாளரை சந்திக்க வந்ததாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டதற்கு தனது மேல் சட்டையின் மேல் பாக்கெட்டில் இருந்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது ரூ.3630/- இருந்தது. இந்தப் பணம் குறித்து அவரிடம் கேட்டதற்கு தனது செலவிற்காக வைத்துள்ள சொந்தப்பணம் என தெரிவித்தார். அவரின் விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு ரூ.3630/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

14) ஐந்தாவதாக நின்றிருந்த நபரை கேட்க அவர் தனது பெயர் சி.யுவராஜ் என்றும் மதுராந்தகத்தில் உதவி செயற் பொறியாளராக (இயக்குதல் மற்றும் பராமரித்தல்) பணியாற்றி வருவதாகவும், மரியாதை நிமித்தமாக மேற்படி தலைமை பொறியாளரை சந்திக்க வந்ததாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டதற்கு தனது மேல் சட்டையின் மேல் பாக்கெட்டில் இருந்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது ரூ.3820/- இருந்தது. இந்தப் பணம் குறித்து அவரிடம் கேட்டதற்கு தனது செலவிற்காக வைத்துள்ள சொந்தப்பணம் என தெரிவித்தார். அவரின் விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு ரூ.3820/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

15) ஆறாவதாக நின்றிருந்த நபரை கேட்க அவர் தனது பெயர் என்.துரைராஜ் என்றும், அச்சிறுபாக்கத்தில் உதவி செயற் பொறியாளராக (இயக்குதல் மற்றும் பராமரித்தல்) பணியாற்றி வருவதாகவும், மரியாதை நிமித்தமாக மேற்படி தலைமை பொறியாளரை சந்திக்க வந்ததாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டதற்கு தனது மேல் சட்டையின் மேல் பாக்கெட்டில் இருந்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது ரூ.6420/- இருந்தது. இந்தப் பணம் குறித்து அவரிடம் கேட்டதற்கு தனது செலவிற்காக வைத்துள்ள சொந்தப்பணம் என தெரிவித்தார். அவரின் விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு ரூ.6420/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

16) ஏழாவதாக நின்றிருந்த நபரை கேட்க அவர் தனது பெயர் கே.கண்ணன் என்றும், செயற் பொறியாளராக (பொது) செங்கல்பட்டில் பணியாற்றி வருவதாகவும், மரியாதை நிமித்தமாக மேற்படி தலைமை பொறியாளரை சந்திக்க வந்ததாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டதற்கு தனது மேல் சட்டையின் மேல் பாக்கெட்டில் இருந்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது ரூ.14,740/- இருந்தது. இந்தப் பணம் குறித்து அவரிடம் கேட்டதற்கு தனது செலவிற்காக வைத்துள்ள சொந்தப்பணம் என தெரிவித்தார். இதற்கு ஆதாரமாக செங்கல்பட்டு ஆக்ஸிஸ் வங்கி கிளையின் தனது வங்கி கணக்கு எண். **XXXX**739648 என்ற கணக்கில் **ATM** மூலம் இன்று 02.01.2019 காலை 10.20 மணியளவில் ரூ.8500/-ம், 30.12.2018 அன்று ரூ.10,000/-மும் எடுத்துள்ள விவரத்தை குறுஞ்செய்தி மூலம் விளக்கினார். எனவே அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு ரூ.14,740/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

17) எட்டாவதாக நின்றிருந்த நபரை கேட்க அவர் தனது பெயர் எல்.கிருஉஷ்ணாஜி என்றும், செங்கல்பட்டு மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் கணக்கு அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும் மரியாதை நிமித்தமாக மேற்படி தலைமை பொறியாளரை சந்திக்க வந்ததாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டதற்கு தனது மேல் சட்டையின் மேல் பாக்கெட்டில் இருந்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது ரூ.10,840/- இருந்தது. இந்தப் பணம் குறித்து அவரிடம் கேட்டதற்கு தனது சொந்தப்பணம் என்றும், செங்கல்பட்டு **SBI**

வங்கி கிளையில் தனது வங்கி கணக்கு எண். **XXXX31944806290** என்ற கணக்கில் **ATM** மூலம் 31.12.2018 அன்று 12.37 மணியளவில் ரூ.20,000/- எடுத்துள்ள விவரத்தை குறுஞ்செய்தி மூலம் விளக்கினார். எனவே அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு ரூ.10,840/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. மேலும் பணம் உள்ளதா என்று கேட்டதற்கு தனது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை வாங்கி எண்ணிப்பார்த்தபோது ரூ.30,000/- இருந்தது. **(Rs.500x60).** மேற்படி பணம் ரூ.30,000/- குறித்து கேட்டதற்கு கஜா புயல் பாதித்த பகுதிகளுக்கு மின்வாரிய பணியாளர்களை அனுப்பி வைத்ததற்காக அரசு கணக்கில் இருந்து எடுத்து செலவு செய்த பணத்தை எல்.எண்டத்தூர் உதவி பொறியாளர் திரு.ஆனந்தன் இன்று காலை 10.30 மணியளவில் தன்னிடம் செங்கல்பட்டு மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் வைத்து தன்னிடம் கொடுத்தாகவும், அதை தான் நாளை அரசு கணக்கில் செலுத்தவிருப்பதாகவும் தெரிவித்தார். இந்த தகவலை தொலைபேசி மூலம் மேற்படி உதவி பொறியளரிடம் உறுதிப்படுத்திய பின் மேற்படி திரு. கிருஉஷ்ணாஜி அவர்களிடம் திருப்பி அளித்து அரசு கணக்கில் உடனயடிாக செலுத்த அறிவுறுத்தப்பட்டது. இந்த இரு துறை கூட்டு தணிக்கை இன்று 03.01.2019-ம் தேதி அதிகாலை 1.30 மணியளவில் முடிக்கப்பட்டது. இந்த சோதனையின் போது அலுவலக பணிகளுக்கு இடையூறோ, அரசு உடைமைகளுக்கு சேதமோ ஏற்படாத வண்ணம் நடத்தி முடிக்கப்பட்டது.

ஒப்பம்/- திருமதி வே.சுமதி,
மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,
சென்னை மாவட்டம்,
சென்னை-1.

ஒப்பம்/- திரு.M.குமரகுருபரன்,
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
சிறப்புப் புலனாய்வுக்குழு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/- திரு.தி.கந்தசாமி,
காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/- திரு.S.வள்ளிநாயகம்,
காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/- திருமதி.சோ.மலர்கொடி,
காவல் ஆய்வாளர், சிறப்புப் புலனாய்வுக்குழு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/- திரு.K.முத்து,
சென்னை தெற்கு மண்டல தலைமை
பொறியாளர் (விநியோகம்)
தமிழ்நாடு உற்பத்தி மற்றும் மின் பகிர்மான
கழகம், சென்னை-2.

ஒப்பம்/- திரு.சுரேஉஷ்குமார்
மின்வாரிய மேற்பார்வை பொறியாளர்
செங்கல்பட்டு.

ஒப்பம்/- எம்.தேவக்குமார்,
செயற் பொறியாளர் (MRT) செங்கல்பட்டு.

ஒப்பம்/- எம்.செந்தில்குமார்,
மின்வாரிய உதவி செயற் பொறியாளர்
(O&M)
மாமல்லபுரம்.

ஒப்பம்/- சுகுமார் சுப்பிரமணி
மின்வாரிய உதவி செயற் பொறியாளர்,
மேல்மருவத்தூர்.

ஒப்பம்/- கே.கண்ணன்,
செயற் பொறியாளர் (பொது) செங்கல்பட்டு.

ஒப்பம்/- எல்.கிருஉஷ்ணாஜி
மேற்பார்வை பொறியாளர் அலுவலகம்,
கணக்கு அலுவலர், செங்கல்பட்டு.